முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

வழக்கு எண். ஓ.எஸ்.46/11

2020 ம் வருடம் ஜனவரி மாதம் 29 ம் நாள் புதன் கிழமை

பி டபிள்யூ. என்பவரது வாக்கு மூலம் (1873 ம் வருடத்திய 10 வது விதியின்படி என்பவரால் ஆணையிடப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது,

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரஸ்வதி | தந்தைபெயர் | |
| கிராமம் | | தாலுகா | |
| சமயம் | | ஜாதி | |
| தொழில் | | வயது | |

தேதி : 29.01.2020

குறுக்கு விசாரணை 1,3, மற்றும் 4 பிரதிவாதி தரப்பில்

வாதி மற்றும் பிரதிவாதியினுடைய குடும்பத்தைப் பற்றி எனக்கு நன்கு தெரியும். 1 வது பிரதிவாதிக்கும் அவருடைய கணவருக்கும் நான்கு பெண்மக்கள், 2 ஆண்குழந்தைகள். தாவா 3 வது இலக்க சொத்தை நான் கிரையம் வாங்கும்போது 1 வது பிரதிவாதியின் கணவரும் வாதிகளின் தகப்பனாரும் ஆன கணேசன் இறந்துபோய் இருந்தார். நான் கிரையம் வாங்கும் காலத்தில் கணேசனுக்கு ஆண் மக்களும், பெண் மக்களும் இருந்த விபரம் எனக்கு தெரியும். அதைப்போல் கணேசனின் மக்களுக்கு இடையே பாகப்பிரிவினை எதுவும் ஏற்பட வில்லை என்று எனக்கு தெரியும். நான் கிரையம் வாங்கிய கிரையப்பத்திரத்தில் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் மட்டும் தான் கிரையம் கொடுத்தாக காட்டப்பட்டுள்ளது. கிரையம் வாங்கிய காலத்தில் வாதிகள் இருவருக்கும் திருமணம் ஆகி இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியும். அவர்களை பொறுத்து அந்த கிரையப்பத்திரத்தில் குறிப்புகள் எதுவும் இல்லை. நான் கிரையம் வாங்கிய இடத்தில் காலியிடமாக உள்ளது என்று சொன்னால் அது தவறு. நான் அதில் விவசாயம் செய்கிறேன். இது மதிப்பு மிக்க சொத்து என்று சொன்னால் சரிதான். நான் குடியிருப்பது தார்சு வீடு என்று சொன்னால் தவறு. அது ஓட்டுவீடு. தார்சுவீட்டில் என்னுடைய மகன்கள் குடியிருக்கிறார்கள். என்னுடைய கிரையப்பத்திரமானது தட்டச்சு செய்யப்பட்டதா அல்லது கையால் எழுதப்பட்டதா என்று எனக்கு தெரியவில்லை. அந்த அசல் கிரையப்பத்திரமானது கஜாபுயலின்போது ஓடுவிழுந்து சேதம் ஆகிவிட்டது. இந்த அசல் கிரையப்பத்திரமானது எங்கள் வசம் தான் இருந்தது. 2 வது பிரதிவாதி ஆரம்ப காலத்திலிருந்தே குடும்பத்தில் யார் பேச்சும் கேட்காமல் குடும்பத்தில் சரிவர இல்லாமல்

இருந்தார் என்றால் தவறு. 2வது பிரதிவாதியும் நானும் எங்கள் வசப்படுத்திக்கொண்டு 1வது பிரதிவாதியை மிரட்டி கிரையப்பத்திரத்தை எழுதி வாங்கிக் கொண்டோம் என்றால் தவறு. கணேசனின் மற்ற வாரிசுகளுக்கு தெரியக்கூடாது என்ற நோக்கத்தோடு 1வது பிரதிவாதியை மிரட்டி கிரையம் வாங்கிக்கொண்டோம் என்றால் தவறு. நான் கிரையம் வாங்கிய அசல் கிரையப்பத்திரம் என் வசம் தான் உள்ளது என்றும் அசலை தாக்கல் செய்தால் பல விபரங்கள் தெரிந்துவிடும் என்ற காரணத்தால் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. வழக்கிற்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு நான் தான் வழக்கறிஞருக்கு விபரங்கள் சொன்னேன். என்னுடைய எதிர்வழக்குரையில் கணேசனுக்கு 2 மனைவிகள் இருப்பதாக நான் சொல்லியிருக்கின்றேன். கணேசனுக்கு ஒரு மனைவி தான் என்றும் நான் அவதூராக நான் அவருக்கு 2 மனைவிகள் இருப்பதாக சொல்லிருப்பதன் காரணமாக என் மீது அறந்தாங்கி நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்திருக்கின்றார் என்றால் சரிதான். என்னுடைய எதிர்வழக்குரையில் நான் கேட்டிருப்பது போல நான் கிரையம் வாங்கிய சொத்தில் 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் பாகத்திற்கு ஒதுக்கி அதை எனக்கு ஒதுக்க வேண்டும் என்று கேட்க முடியாது என்றால் தவறு.

குறுக்கு விசாரணை வாதி தரப்பில்

கணேசன் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கும்போது வாதிகளுக்கு நான் கிரையம் வாங்குவது சம்மந்தமாக நான் தகவல் எதுவும் சொல்லவில்லை. நான் கிரையம் வாங்கும்போது 3வது பிரதிவாதிக்கு வயது 15 அல்லது 16 இருக்கும். எனவே மைனருக்காக அவருடைய தாயார் 1வது பிரதிவாதி கையெழுத்து போட்டார். வாதிகளுக்கு எப்போது திருமணம் நடந்தது என்று எனக்கு தெரியாது. 2வது வாதி தன் விருப்பத்தின்பேரில் திருமணம் செய்துகொண்டார். 1வது வாதி பெற்றோர் பார்த்து திருமணம் செய்து வைத்தார்கள். 2வது வாதி கோவிலில் தானாக திருமணம் செய்துகொண்டார். 1வது வாதிக்கு என்ன சீர்வரிசை செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. என்னுடைய கிரையப் பத்திரத்தில் வெள்ளைச்சாமி என்பவர் சாட்சி கையெழுத்து போட்டிருந்தார். பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு நான் போகவில்லை என் கணவர் தான் கிரையத்தை முடித்தார். எனவே யார் பணம் கொடுத்தார்கள் யார் வாங்கினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் தவறு. 2வது பிரதிவாதி தான் கிரையத்தை கொடுத்திருப்பார்கள். குடும்பத்தில் யார் யாருக்கு எவ்வளவு பங்கு வீதம் கிரையத் தொகையில் கொடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. 1வது பிரதிவாதி நீதிமன்றத்தில் தன்னை மிரட்டி இந்த கிரையம் எழுதப்பட்டதாக சொல்லிருக்கின்றார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்று கேட்டால் அது எனக்கு தெரியாது. அழிந்துபோன அசல் கிரையப்பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை. உள்நோக்கத்தோடு அந்த அசல்கிரைய ஆவணத்தை நான் தாக்கல் செய்யாமல் மறைக்கின்றேன் என்றால் தவறு. தண்ணீரால் அது அழிந்து போய் இருந்தாலும் கூட அது என்னால் தாக்கல் செய்ய

முடியும் என்று சொன்னால் அது என் கை வசம் இல்லை. 3 வது பிரதிவாதிக்கு 5.9.91 தேதியில் 13 வயதா என்று சொன்னால் இருக்கலாம். பொதுக்குடும்ப சொத்து செலுவுக்காகத் தான் தாவா 3 இலக்க சொத்தை கிரையம் கொடுக்கப்பட்டதாக நான் கூறுவது உண்மை அல்ல என்றால் தவறு. அதைப்போல் வாதிகளின் அவர்களின் திருமணத்தின் போது நல்ல செய்முறைகள் செய்திருப்பதாக நான் சொல்லிருப்பது தவறு என்று சொன்னால் செய்முறைகள் செய்திருப்பது எனக்கு தெரியாது. கிரையத்தேதியிலிருந்து தாவா 3 இலக்க சொத்து என்னுடைய அனுபவத்தில் இல்லை என்றும் அது வாதிகளின் குடும்பத்தில் கூட்டு அனுபவத்தில் உள்ளது என்று சொன்னால் தவறு. பட்டாக்கள் எங்கள் பெயரில் மாற்றிக்கொண்டோம் அதை நான் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய எதிர்வழக்குரையில் குறிப்பிட்டிருப்பது போல கிரைய சொத்தை 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் பாகத்திற்கு பொறுத்து அது எங்களுக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டு இருப்பதற்கு நீதிமன்ற கட்டணம் எதுவும் செலுத்தவில்லை. 2 வது பிரதிவாதி கேட்டுக்கொண்டதன் பெயரில் என் கணவர் அவருடைய பெயரில் உண்மைக்கு புறம்பாக கிரையப்பத்திரத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் தவறு. தாவா 3 வது இலக்க சொத்து அதிக மதிப்பு உள்ள சொத்து என்பதால் அதை நான் அபகரித்துக்கொள்ளும் நோக்கத்தோடு 2 வது பிரதிவாதியின் துணையுடன் இந்த கிரையப்பத்திரத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் தவறு. தாவா மற்ற இலக்க சொத்துக்கள் மதிப்பு குறைவான புஞ்சை மற்றும் நஞ்சை நிலங்கள் என்று சொன்னால் அது சரிதான். எனவே என் கணவர் வாங்கிய கிரையப்பத்திரம் செல்லக்கூடியது அல்ல என்றும் எனவே வாதிகள் வழக்கில் கேட்ட படி 7/2 விகிதம் கிடைக்கத்தக்கது என்றால் தவறு.

திறந்த நீதிமன்றத்தில்  சாட்சி மற்றும் அவரது
வழக்குநர் முன்னிலையில் சாட்சியின்
வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில்
வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக்
காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொங்ளளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.